ZURICH

**இணைப்பு 2**

**<பி.பி.ஆர் / தனிநிலை திட்டம்> க்கான காப்பீட்டுக் கட்டண மறுசீரமைப்பு**

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)**

| எண் | கேள்விகள் | பதில்கள் |
|---|---|---|
| 1. | **எனது காப்பீட்டுக் கட்டணம் ஏன் சீரமைக்கப்படுகிறது?** | உங்களின் வயது அதிகரிக்கும்போது, மருத்துவக் காப்பீட்டுக் கட்டணம் அதிகமானதாக இருப்பதை உணர்வீர்கள் என்று நாங்கள் அறிவோம். உங்கள் காப்புறுதி, பாதுகாப்பை நிலையாக வைத்திருப்பதோடு உங்கள் நீண்டகால நிதித் திட்டமிடலுக்கு ஆதரவளிக்கும் வகையில், புதிய மருத்துவக் காப்பீட்டுக் கட்டண அமைப்பினை அறிமுகப்படுத்துகிறோம். 60 வயதிலிருந்து, மருத்துவ காப்பீட்டுக் கட்டணங்கள் பெரிய அளவில் அடிக்கடி மாற்றப்படுவதற்குப் பதிலாக, சிறிய அளவிலான மாற்றங்களாகவும் குறுகிய இடைவெளிகளில் ஏற்படும் வகையிலும் சீரமைப்பு செய்யப்படும்.<br><br>இந்த மாற்றம் உங்களுக்குப் பாதகமாக இருக்காது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம். புதிய கட்டண அமைப்பின் கீழ், உங்கள் மீதமுள்ள காப்புறுதி காலத்திற்கான மொத்த மருத்துவக் காப்பீட்டுக் கட்டணமானது முந்தைய கட்டண அமைப்பின் கீழ் நீங்கள் செலுத்தியிருக்கும் தொகையை விட அதிகமானதாக இருக்காது. (எதிர்கால கட்டண மறுநிர்ணயங்களைத் தவிர).<br><br>உங்களுக்குத் தேவையான நேரங்களில் தரமான மருத்துவச் சேவைகளைத் தொடர்ந்து வழங்க மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவனம் உறுதிபூண்டுள்ளோம். |
| 2. | **எனது காப்பீட்டுக் கட்டணத்தின் சீரமைப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?** | 60 வயதிற்குப் பிறகு, உங்கள் மருத்துவ காப்பீட்டுக் கட்டணங்கள் சீரமைப்பு செய்யப்படும்போது, ஆண்டுதோறும் ஏற்படும் கட்டண உயர்வு 10% ஐ மேற்பட்டு மீறாததை நாங்கள் உறுதி செய்கிறோம். மேலும், உங்கள் பாலிசியின் எஞ்சிய காலத்திற்கான மொத்த மருத்துவக் காப்பீட்டுக் கட்டணமானது, முந்தைய கட்டண அமைப்பின் கீழ் நீங்கள் செலுத்தியிருக்க வேண்டிய தொகையை விட அதிகமாக இருக்காது (எதிர்கால கட்டண மறுநிர்ணயங்களைத் தவிர) என்பதையும் உறுதிப்படுத்துகிறோம். |
| 3. | **எனது மருத்துவக் காப்பீட்டுக் கட்டணம் எப்போது சீரமைக்கப்படும் ?** | புதிய மருத்துவ காப்பீட்டுக் கட்டண அட்டவணையானது, உங்கள் அறிவிப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த பாலிசி ஆண்டு நிறைவு தேதியிலிருந்து அமலுக்கு வரும். |
| 4. | **இந்த முறை உங்கள் மருத்துவத் திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணம் மறுநிர்ணயம் செய்யப்படவில்லை என்பது போல் தோன்றினாலும், எதிர்காலத்தில் மீண்டும் மறுசீரமைக்கப்படுமா?** | மருத்துவச் செலவுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, எங்களது மருத்துவத் திட்டங்களை அவ்வப்போது சீரமைத்து வருகிறோம். மேலும், மருத்துவச் செலவுகளை நிர்வகிப்பதற்கு எங்களது மருத்துவமனை கூட்டாளர்களுடன் இணைந்து |

<table>
<tr><td></td><td></td><td>பணியாற்றுகிறோம். எதிர்காலத்தில் ஏதேனும் கட்டணச் சீரமைப்பு தேவைப்பட்டால், அது குறித்து முன்கூட்டியே உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.</td></tr>
<tr><td>5.</td><td>மேலும் தகவல் தெரிந்து கொள்ள நான் யாரைத் தொடர்பு கொள்ளலாம்?</td><td>மேலும் உதவிக்கு:<br><br>• எங்கள் வாடிக்கையாளர் சேவை உதவி எண், 1-300-888-622-ஐத் தொடர்பு கொள்ளவும்;<br>• அல்லது callcentre@zurich.com.my என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்;<br>• இல்லையெனில், உங்கள் நிதித் திட்ட ஆலோசகரைத் தொடர்பு கொள்ளலாம்;<br>• அல்லது அருகிலுள்ள மலேசியா சூரிச் லைஃப் காப்பீட்டு நிறுவனத்தின் கிளைகளுக்குச் செல்லவும்.</td></tr>
<tr><td>6.</td><td colspan="2">எனது மருத்துவக் காப்பீட்டுக் கட்டணச் சீரமைப்பு தொடர்பாக நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?<br><br>உங்களின் தற்போதைய காப்பீட்டுக் கட்டணம் செலுத்தும் முறையைப் பொறுத்து, புதிய தொகையை நாங்கள் வசூலிப்பதற்கு உங்கள் வங்கியுடன் நீங்கள் கூடுதல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கலாம். இது குறித்தக் கூடுதல் விவரங்களுக்குக் கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.<br><br>
<table>
<tr><th>தற்போதைய கட்டணம் செலுத்தும் முறை</th><th>நான் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?</th></tr>
<tr><td>கிரெடிட் அல்லது டெபிட் கார்டு, தானியங்கி - டெபிட் (பரிவர்த்தனைத் தொகை வரம்பு ஏதுமின்றி)</td><td>மாற்றம் ஏதும் தேவையில்லை - உங்களின் தற்போதைய கட்டண ஏற்பாடு தொடரும்.</td></tr>
<tr><td>நேரடிப் பற்று மின்னணு-ஆணை (பரிவர்த்தனைத் தொகை வரம்புடன்)</td><td>இந்த இணைப்பின் மூலம் நேரடி டெபிட் பதிவை நிறைவு செய்யவும்: https://mya.zurich.com.my/AdhocPayment/Page/DirectDebitRegistration.aspx. இதன் மூலம் உங்களது வங்கிக் கணக்கிலிருந்து புதிய காப்பீட்டுக் கட்டணத் தொகையை நாங்கள் வசூலிக்க இயலும்.<br><br>ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்கள், உங்களது வங்கி கணக்கின் தானியங்கி டெபிட் படிவத்தைக் கவனிக்கவும். உங்களின் அதிகபட்ச வரம்பு, புதிய காப்பீட்டுக் கட்டணத் தொகையை விடக் குறைவாக இருந்தால், அந்த வரம்பை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். அதனைப் பின்வரும் முறைகளில் செய்யலாம்:</td></tr>
</table>
</td></tr>
</table>

| | |
|---|---|
| | 1. எங்களது வாடிக்கையாளர் வலைத்தளத்தில் (https://myzurichlife.com.my) மாற்றலாம் அல்லது<br>2. அதிகபட்ச வரம்பை மாற்றுவதற்கு வங்கியில் புதிய படிவத்தைச் சமர்ப்பிக்கலாம். |
| வங்கிகளுடனான நிலையான அறிவுறுத்தல்கள் | உங்களின் வருடாந்திர காப்பீட்டுக் கட்டணங்கள் சரியாகச் செலுத்தப்படுவதை உறுதிசெய்யவும். ஒவ்வொரு ஆண்டும் புதிய கட்டணத் தொகையைப் பிரதிபலிக்கும் வகையில் உங்களது நிலையான அறிவுறுத்தல்களை மாற்றியமைக்க, தயவுசெய்து உங்கள் வங்கியுடன் இணைந்து செயல்படவும். உங்கள் காப்பீட்டுக் கட்டணம் மாறும் போதெல்லாம், இந்த மாற்றத்தைச் செய்வது அவசியமாகும். |